ආයතනයේ නම : විදුලිබල හා බලශක්ති අමාත්‍යාංශය
පාර්ලිමේන්තුවේ රජයේ ඉඟුම් පිළිබඳ කාරක සභාව විසින් සභාගත කරන ලද වාර්තා සම්බන්ධයෙන් ස්ථාවර නියෝග අංක 119(4) යටතේ ගරු අමාත්‍යවරයාගේ නිරීක්ෂණ හා ගනු ලබන පියවර පාර්ලිමේන්තුව වෙත ඉදිරිපත් කිරීම

நிறுவனத்தின் பெயர்: மின்சாரம் மற்றும் எரிசக்தி அமைச்சு பாராளுமன்றத்தின் அரச கணக்குக் குழுவினால் முன்வைக்கப்பட்ட அறிக்கை தொடர்பாக நிலையியற் கட்டளை இலக்கம் 119 (4) இன் கீழ் கௌரவ அமைச்சரின் அவதானிப்புக்களும் மற்றும் அது தொடர்பா எடுக்கப்படும் நடவடிக்கைகளும் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பித்தல்

Name of the Institution: **Ministry of Power & Energy**
Submission of observations of Hon. Minister and steps taken with regard to the reports tabled by the Committee on Public Accounts in terms of Standing Order No. 119 (4)

மின்சாரம் பிரிவு

அரச நிறுவனங்கள், மாகாண சபை மற்றும் உள்ளூராட்சி நிறுவனங்களின் நிதி நிர்வாகம் மற்றும் செயற்பாடுகள் தொடர்பிலான இணையவழி தகவல் முகாமைத்துவ முறைமை ஊடாக மதிப்பிடல் - 2020 நிதியாண்டு தொடர்பில் நடைமுறை முன்னேற்றத்தை பாராளுமன்றத்தில் சமர்ப்பித்தல்.

பாராளுமன்ற வெளியீடு தொடர் எண் - 183

நிறுவனத்தின் பெயர் - மின்சாரம் மற்றும் எரிசக்தி அமைச்சு

குழுவால் கண்டறியப்பட்ட குறைபாடுகள்	அந்த விடயங்கள் தொடர்பிலான தெளிவுபடுத்தல்
1. வருடாந்த கொள்முதல் திட்டம் தயாரிக்கப்படாமை	அமைச்சின் வருடாந்த கொள்முதல் திட்டம் 2022 மற்றும் 2023 ஆம் ஆண்டுகளுக்காக தயாரிக்கப்பட்டுள்ளது.
2. பரிசீலனைக்கு உட்பட்ட ஆண்டிற்கான நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட வேண்டிய செயல்திறன் அறிக்கைகள் உரிய திகதியில் சமர்ப்பிக்கப்படாமை	2020 செயற்பாட்டு அறிக்கை 2021.07.05 ஆம் திகதி பாராளுமன்றத்தில் ஒப்படைக்கப்பட்டதுடன் 2021 ஆம் ஆண்டு அறிக்கை தொடர்பாக இறுதி கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கைகளை இந்த அமைச்சுக்கு 2022.06.15ஆம் திகதி கிடைக்கப் பெற்றமையால் குறித்த தகவல்கள் உள்ளடக்கபட்டு செயற்பாட்டு அறிக்கை அச்சிடப்பட்டு 20222.08.02 ஆம் ஒப்படைக்கப்பட்டது. மேலும் குறித்த அறிக்கைகளை கையளிப்பதற்காக பாராளுமன்றத்திற்குள் பிரவேசிக்க அனுமதி பெறுவதில் ஏற்பட்ட தாமதத்தின காரணமாக 2021 ஆம் ஆண்டுக்கான செயறறிறன் அறிக்கையை உரிய திகதியில் சமர்ப்பிக்க தவறப்பட்டது.
3. நிறுவனங்களைப் பற்றிய தகவல்களை பொதுமக்களுக்கு வழங்க இணையதளத்தை உருவாக்கி பராமரிக்காமை.	இணையதளமானது ஏற்கனவே 2020 ஆம் ஆண்டில் உருவாக்கப்பட்டதுடன் மற்றும் தற்போது வரை புதிய தகவல்களை புதுப்பிப்பதன் மூலம் வலைத்தளம் அமைச்சால் பராமரிக்கப்படுகிறது.
4. குடிமகன்/சேவை பெறுநர் சத்திய பிரமாணத்தை முறையாக தயாரிக்கப்பட்டு செயல்படுத்தப்படாமை.	2020 ஆம் ஆண்டிற்கான அமைச்சின் குடிமகன்.சேவை பெறுநர் சத்திய பிரமாணத்தை தயாரிப்பதற்காக நியமிக்கப்பட்ட குழுவால், தயாரிக்கப்பட்ட குடிமகன்.சேவை பெறுநர் சத்திய பிரமாணத்திற்கு 2022 ஆம் ஆண்டில் அமைச்சின் செயலாளரின் ஒப்புதல் பெற்று கொடுக்கப்பட்டுள்ளது. அதற்கேற்ப செயல்படுமாறு அனைத்து அதிகாரிகளுக்கும் தெரிவிக்கப்பட்டு, அமைச்சின் இணையதளத்தில் வெளியிடப்பட்டுள்ளது.

5. நிறுவனத்தின் குடிமகன்.சேவை பெறுநர் சத்திய பிரமாணத்தை செயல்படுத்தப்படுவதைக் கண்காணிக்கவும் மதிப்பீடு செய்யவும் நிறுவனம் முறைமையொன்றை தயாரிக்காமை.	2022 ஆம் ஆண்டிற்குள் அமைச்சின் குடிமகன்.சேவை பெறுநர் சத்திய பிரமாணத்தை செயல்படுத்தப்படுவதைக் கண்காணித்தல் தொடர்பில் பிரிவிற்கு பொறுப்பான நிறைவேற்று அதிகாரிகளுக்குத் தெரிவிக்கப்பட்டுள்ளது.
6. தயாரிக்கப்பட்ட மனித வளத் திட்டத்தின் மூலம் ஒரு வருடத்திற்கு ஒரு ஊழியருக்கு குறைந்தபட்சம் 12 மணிநேர பயிற்சியைக் குறிப்பிடாமை.	2023 ஆம் ஆண்டிற்கு,பயிற்சி வாய்ப்புகள் தொடர்பாக ஒதுக்கீடுகள் ஒதுக்கப்படாமையால் அதற்காக தேவையான ஒதுக்கீடுகள் தேசிய வரவு செலவு திட்ட திணைக்களத்திடம் கோரப்பட்டுள்ளது. குறித்த ஒதுக்கீட பெற்றுக் கொடுக்கப்படும் என்ற எதிர்பார்ப்பில் 2023 ஆம் ஆண்டு தொடர்பாக அமைச்சின் சகல ஊழியர்களிடம் விசாரிக்கப்பட்டு குறைந்த பட்ச 12 மணத்தியால பயிற்சி வாய்ப்புகளை வழங்க திட்டமிடப்பட்டுள்ளது.
7. முழு ஊழியர்களையும் உள்ளடக்கிய செயற்றிறன் ஒப்பந்தங்களை உருவாக்கி ஒப்பந்தமிடாமை.	2023 ஆம் ஆண்டிற்கான முழு ஊழியர்களையும் உள்ளடக்கிய செயற்றிதிறன் ஒப்பந்தங்கள் கையெழுத்திடப்பட்டுள்ளன.
8. திட்டமிடப்பட்ட பயிற்சி வாய்ப்புகளிலிருந்து 50% க்கும் குறைவாக காணப்படுகின்றமை.	2020 ஆம் ஆண்டில், கோவிட் தொற்றுநோய் மற்றும் போதிய பயிற்சித் திட்டங்கள் இல்லாத காரணத்தால், அமைச்சின் பணியாளர்களுக்கு திட்டமிடப்பட்ட பயிற்சி வாய்ப்புகளை வழங்க முடியாமல் போனது. எனினும் தேசிய வரவு செலவு திட்ட திணைக்களத்தின் மேலதிக ஒதுக்கீடு மேற்கொள்ளல் உத்தேசமாக 2023 ஆம் ஆண்டில் போதுமான பயிற்சி வாய்ப்புகளை வழங்க திட்டமிடப்பட்டுள்ளது.

கை.ஒ. எம் பீ டீ யூ கே மாபா பதிரண

செயலாளர்

மின்வலு மற்றும் எரிசக்தி அமைச்சு

எரிசக்தி பிரிவு

பாராளுமன்ற தொடர் இல.183- முகாமைத்துவ முறைமையின் ஊடான அரச நிறுவனங்களின் செயலாற்றுகைகள், மாகாண சபை மற்றும் உள்நாட்டு அரச நிறுவனங்களின் தகவல்களுக்கமைய அவற்றின் நிதிக் கட்டுப்பாடுகளை மதிப்பீடு செய்தல் - நிதியாண்டு - 2020

பகுதி ஒன்று

	குழுவினால் அடையாளம் காணப்பட்ட குறைபாடுகள்/ குழுவினால் வழங்கப்பட்ட பரிந்துரைகள்	குறைபாடுகளை நிவர்த்தி செய்வதற்கு குழுவினால் எடுக்கப்பட்டுள்ள் நடவடிக்கைகள்/ சிபார்சுகளை அமுல்படுத்துதல்/தற்போதைய நிலை
01	கணக்காய்வாளர் நாயகத்தால் வழங்கப்பட்ட கணக்காய்வு வினாக்களுக்கு ஒரு மாத்திற்குள் பதிலளிக்கப்படாத கணக்காய்வு வினாக்கள்	வலுசக்தி அமைசசு என்று அழைக்கப்படும் ஒரு தனி அமைச்சானது 2020 ஆகஸ்ட் 30 ஆம் திகதி தாபிக்கப்பட்டதுடன், பிரதான கண்கீட்டு உத்தியோகத்தரின் நேரடி மேற்பார்வையின் கீழ் கணக்காய்வாளர் நாயகத்தினால் எழுப்பப்படும் கணக்காய்வு வினாக்களுக்கு இற்றை வரை முறையான வகையில் பதில்களை வழங்கி வருகின்றது. ஏதாவது கணக்காய்வு வினாக்களுக்கு பதில்களை வழங்குவதற்கு மேலதிக கால அவகாசம் தேவைப்படின் அதற்கான அனுமதியை கணக்காய்வாளர் நாயகத்திடமிருந்து பெற்றுக்கொள்வதுடன் அவரை தொடர்பு கொள்வதற்கும் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன.
02.	உள்ளக கணக்காய்விற்கு ஒரு மாத்திற்குள் பதிலளிக்கப்படாத கணக்காய்வு வினாக்கள்	வலுசக்தி அமைசசு என்று அழைக்கப்படும் ஒரு தனி அமைச்சானது 2020 ஆகஸ்ட் 30 ஆம் திகதி தாபிக்கப்பட்டதுடன், பிரதான கண்கீட்டு உத்தியோகத்தரின் நேரடி மேற்பார்வையின் கீழ் கணக்காய்வாளர் நாயகத்தினால் எழுப்பப்படும் கணக்காய்வு வினாக்களுக்கு இற்றை வரை முறையான வகையில் பதில்களை வழங்கி வருகின்றது.
03	வருடாந்த இருப்புக்களின் கணக்கெடுப்பில் (Annual Board of Survey) உள்ளடக்கப்பட்ட மேலதிக தன்மைகள், குறைபாடுகள் மற்றும் பிற சிபார்சுகள் தொடர்பான பரிந்துரைகளை பரிந்துரைக்கப்பட்ட காலத்திற்குள் அமுல்படுத்தாமை..	வருடாந்த இருப்புக்களின் கணக்கெடுப்பில் (Annual Board of Survey) உள்ளடக்கப்பட்ட மேலதிக தன்மைகள், குறைபாடுகள் மற்றும் பிற சிபார்சுகள் முறையாக அமுல்படுத்தப்படுவதோடு, வருடாந்த இருப்புக்களின் கணக்கெடுப்பு (Annual Board of Survey) செயற்பாடுகளை முறையாக முன்னெடுப்பதற்கு துகந்த நடவடிக்கைகள் எடுக்கப்படும்.
04	வாகனம் பதிவளிக்கப்பட்டதன் பின்னர்ஆறு(06) மாதத்திற்கு குறைவான காலப்பகுதியில் விற்பனை செய்யப்படாத வாகனம்	தற்போது அவ்வாறான வாகனங்கள் எதுவும் அமைச்சில் இல்லை. அத்துடன் சேவையில் இருந்து விலகிய வாகனங்களை முறைப்படி விற்பனை செய்வதற்கான செயற்பாடுகளை முன்னெடுப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது.

05.	நிதி ஒழுங்குவிதிமுறைகளின் படி செலுத்தத்தவறிய தொகையானது ஒரு மாதத்திற்குள் சரிசெய்யப்படுதல் வேண்டும். எனினும், இவ் மீதியானது வங்கிக்கணக்கிணங்கல் கூற்றில் இடம்பெற்றுள்ளது.	துற்போது, இத் தவறுகள் வங்கிக்கணக்கிணங்கல் கூற்றிற்கிணங்க சரிசெய்யப்பட்டு முறையாக பரிமாற்றல்கள் இடம்பெற்றுள்ளதுடன், சம்பந்தப்பட்ட பிரிவுகளுக்கும் இவை அனுப்பப்பட்டுள்ளது.
06.	தற்போது நிலுவையாக உள்ள கடன்கள், ஒரு (01) வருடத்திற்கு மேலான காலப்பகுதி கொண்டவை ஆகும்.	இந்தக் கடனுடன் தொடர்புடைய கடனாளி நிரந்தரமாக படுத்த படுக்கையாகி விட்டதாகவும், இதன்காரணமாக எந்த ஒரு உறவினரும் அவரை பொறுப்பேற்க முன்வரவில்லை எனவும் அவதானிக்கப்பட்டுள்ளது. இதனால், இந்த வழக்கை மேற்கொண்டு தொடர்வதென்பது கடினமான விடயமாகுமென என 2021.03.01 ஆம் திகதி அன்று சட்டமா அதிபருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. இதன் காரணமாக, இவ் வழக்கை ரத்து செய்ததாக நீதிமன்றம் அறிவித்துள்ளது. எனவே, இந்த கடனை புத்தகங்களில் இருந்து பதிவளிப்பதற்கான அதிகாரத்தை வழங்கக் கோரி அரச நிதித் திணைக்களத்திடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. இந்தக் கோரிக்கைக்கு ஒப்புதல் கிடைத்தவுடன், இந்த நிலுவைத் தொகையை புத்தகத்தில் இருந்து பதிவளிப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படும்.
07.	நிதியியல் ஒழுங்குமுறை 371 இல் கூறப்பட்டுள்ள வரையறைக்கு மேலாக உப –கட்டு நிதி வழங்கப்பட்டுள்ளது.	தவிர்க்க முடியாத சூழ்நிலையில், இவ் செயற்பாடுகள் 2020 ஆம் ஆண்டில் இடம்பெற்றுள்ளதுடன், தற்போது இவ் செயற்பாடுகள் முற்றாக தவிர்க்கப்பட்டுளளது. அத்துடன், தற்போது, குறித்த வரையறைக்குள்ளேயே மட்டும் உப –கட்டு நிதி வழங்குவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது.
08.	திறைசேரி பேரேடுகளுடன் கட்டு நிதிக் கணக்குகள் சரிசெய்யப்பட்ட பின்னர், இக் கணக்கில் மாதத்தோறும் ஏற்படும் வித்தியாசங்களை நிவர்த்தி செய்வதற்கு தவறியுள்ளது.	தற்போது, திறைசேரி பேரேடுகளுடன் கட்டு நிதிக் கணக்குகள் சரிசெய்யப்பட்ட பின்னர், இக் கணக்கில் ஏற்படும் வித்தியாசங்கள் மாதத்தோறும் நிவர்த்தி செய்யப்படுகின்றன.
09.	குறிக்கப்பட்ட காலத்தினுள், முறையாக விற்பனை செய்து வருமானங்களை பெற்றுக்பொள்வதற்கு தவறியுள்ளது.	குறிக்கப்பட்ட காலத்தினுள், முறையாக விற்பனை செய்து வருமானங்களை பெற்றுக்பொள்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது.

10.	குறித்த ஆண்டிற்கான செயலாற்றுகை அறிக்கையானது குறித்த திகதியில் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படாததோடு அவை மீளாய்வு நிலையில் உள்ளது	2020 ஆம் ஆண்டுக்கான செயலாற்றுகை அறிக்கை 2020 ஆம் ஆண்டின் முதல் காலாண்டில் தயாரிக்கப்பட்டது. இருப்பினும், 2020 ஆம் ஆண்டின் ஆரம்பத்தில் காணப்பட்ட கோவிட் தொற்று நோய் மற்றும் குறைந்நதளவிலான உத்தியோகதர்கள் வேலைக்கு சமுகமளித்ததனால் தகவல்களை பெற்றுக்கொள்வதில் ஏற்றபட்ட தாமதம் போன்றவற்றால் புத்தகங்கங்ளை அச்சிடுவதில் தாமதங்கள் ஏற்பட்டன. ஆத்துடன் கணக்காய்வு அறிக்கையை உரிய காலத்தில் பெற்றுக்கொள்வதில் ஏற்பட்ட தாமதங்கள் போன்றவற்றால், உரிய திகதியில் செயலாற்றுகை அறிக் அறிக்கையை பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதில் தாமதம் ஏற்பட்டது. எவ்வாறாயினும், 2021 ஆம் அண்டிற்கான செயலாற்றுகை அறிக்கை தற்போது சமர்ப்பிகப்பட்டுள்ளது.

பகுதி இரண்டு

இல.	குழுவினால் அடையாளம் காணப்பட்ட குறைபாடுகள்/ குழுவினால் வழங்கப்பட்ட பரிந்துரைகள்	குறைபாடுகளை நிவர்த்தி செய்வதற்கு குழுவினால் எடுக்கப்பட்டுள்ள் நடவடிக்கைகள்/ சிபார்சுகளை அமுல்படுத்துதல்/தற்போதைய நிலை
01	அனைத்து ஊழியர்களையும் உள்ளடக்கிய வகையில் செயற்திறன் ஒப்பந்தத்தை தயாரிப்பதற்கான உடன்படிக்கைகளில் ஈடுபடவில்லை.	தற்போது, முழு ஊழியர்களையும் உள்ளடக்கிய வகையில் செயற்திறன் உடன்படிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது. மேலும, இதில் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன
02	திட்டமிடப்பட்ட பயிற்சி நெறி வாய்ப்புகளில் 50% க்கும் குறைவான அளவிலேயே பயிற்சி நெறி வாய்ப்புகள் காணப்படுகின்றன.	2020 இன் கோவிட் தொற்றுநோய் காரணமாக அலுவலகங்களை முறையாக நடாத்தி செல்லது மட்டுப்படுத்தப்பட்டதால், திட்டமிட்டபடி ஊழியர்களுக்கான பயிற்சிநெறியை நாடத்தி செல்வது சாத்தியமில்லாத விடயமென இவதானிக்கப்பட்டுளளது. ஏவ்வாறாயினும், முடிந்தவரை அதிகபட்ச அளவில் பயிற்சி நெறிகளை நடாத்துவதற்குத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது.
03	குறித்த பந்திகளில் கணக்காய்வாளர் நாயகத்தால் சுட்டிக்காட்டப்பட்ட குறைபாடுகள்/தவறுகள் நிவர்த்தி செய்யப்படவில்லை.	கணக்காய்வாளர் நாயகத்தால் குறிப்பிட்ட பந்திகளில் சுட்டிக் காட்டப்பட்ட குறைபாடுகள்/தவறுகளைத் திருத்துவதற்குத் தேவையான வழிகாட்டுதல்கள் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு வழங்கப்பட்டுள்ளதுடன், எதிர்காலத்தில் மேற்படி குறைபாடுகள் மற்றும் தவறுகளைத் தவிர்க்கும் வகையில் செயற்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.அத்துடன் தொடாச்சியான கண்காணிப்புக்களும் இடம்பெற்று வருகின்றன.

ஒப்பம்/.எம் பி டி யூ கே மாபா பத்திரன

செயலாளர்

மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சு